செ.வெ.எண்: 27 நாள்: 18.12.2016

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தமிழகஅரசு பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை மற்றும் கீரனூரில் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.12.2016) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்-3ம் நாள் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மாற்றுத்திறனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில் கந்தர்வக்கோட்டை ஏ.ஐ.டி திருமண மண்டபத்தில் பிரியம் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு அறக்கட்டளை மற்றும் கீரனூர் ஆனந்த் திருமண மண்டபத்தில் அன்னை தெரசா மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசளிக்கும் விழா துவக்கி வைக்கப்பட்டது. இதில் மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் உதவி உபகரணங்களும் வழங்கப்பட்டது.

மேலும் தமிழகஅரசு காதுகேளாத மாற்றுத்திறனாளிகளுக்கு மீண்டும் கேட்கும் திறன் வரும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் வரையிலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. இந்த அறுவை சிகிச்சை மூலம் நமது மாவட்டத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1500 மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு வருவதுடன் வருவாய்த்துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகை ரூ.500 லிருந்து தற்பொழுது ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நமது மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் 6000க்கும் அதிகமான மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையினை பெற்று வருகின்றனர். மேலும் தமிழகஅரசு அனைத்து மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் உதவித்தொகை பெறும் உடல் ஊனத்தின் அளவு 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக குறைத்துள்ளது. இவ்வாறு மாற்றுத்திறனாளிகளுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழக அரசின் நலத்திட்டங்களை மாற்றுத்திறனாளிகள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கந்தர்வக்கோட்டை மற்றும் கீரனூரில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிகழ்ச்சிகளில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தி திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.பாலகுரு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.வசந்தராமக்குமார், அன்னை தெரசா மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு அறக்கட்டளை தலைமை நிர்வாகி திரு.பவுன்துரை, பிரியம் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு அறக்கட்டளை தலைமை நிர்வாகி செல்வி.சங்கீதபிரியா, திரு.இளங்கோவன் (மா.ஆ.அ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**